**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No.166/2021**

**நாள்.23.01.2026**

**வா.சா. 1- கிருஷ்ணசாமி**

**1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்குச் சொத்தினுடைய மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் தெரியாது. வழக்குச் சொத்தினுடைய சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.297/2M. சர்வே எண்.297/2 ல் உள்ள மொத்த சொத்தும் ஆதியில் சந்திரசூரியன் பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.297/2 சொத்து வடபாகம், தென்பாகம் என பிரித்து வடபாகத்தை 1 முதல் 3 பிரதிவாதிகள் வகையறாக்கள் சந்திரசூரியனிடமிருந்து கிரையம் வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான் தெற்கு பாகம் எங்களுடையது வடக்குப் பாகம் அவர்களுடையது. 1 முதல் 3 பிரதிவாதிகள் வகையறாக்கள் சந்திரசூரியனிடமிருந்து கிரையம் வாங்கிய வருடம் என்ன என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரையம் வாங்கிய வருடம் 1977 என்றால் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரையத்திற்கு பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்டார்கள் என்றால் ஆமாம். நான் எப்போது கிரையம் பெற்றேன் என்றால் என் அப்பா 2009 ல் கிரையம் வாங்கினார். என் அப்பா கிரையம் வாங்கும்போது மேல்பக்கத்தில் பாதை இருந்தால் அது கிரையம் ஆவணத்தில் சொல்லப்பட்டிருக்கும் என்றால் சந்திரசூரியன் பிள்ளை பிறப்பித்த ஆவணத்தில் 2 பேருக்கும் பாதை இருப்பதாகத்தான் சொல்லி ஆவணம் எழுதியுள்ளார் பாதையின் அரசு வரைபடத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 என் தந்தையின் கிரைய ஆவணத்தில் உள்ள விபரங்கள் என்னைக் கட்டுப்படுத்தும் என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ல் பாதை பற்றி சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் வா.சா.ஆ.4 ல் பாதை இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என நான் சொல்லியிருந்தால் அது தவறு என்றால் பாதை இயற்கையாக உள்ளது. நான் சொல்வது போல் பாதை இயற்கையாக இருந்தால் பாதை பஞ்சாயத்திற்கு தான் பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் பாதை இயற்கையாக இருந்தால் பாதை பஞ்சாயத்திற்கு இதுநாள் வரை போகவில்லை என்றால் சரிதான். பாதை ஆக்கிரமித்து 1 முதல் 3 பிரதிவாதிகள் வீடு கட்டிவிட்டார்கள் என பஞ்சாயத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கிரையம் பெற்ற சொத்திற்கு தென்பக்கம் கிழமேல் பாதை உள்ளது என்றால் இல்லை. தாவா சொத்தினை பார்வையிட சர்வேயர், நீதிமன்ற ஆணையர் வந்தார்கள் என்றால் சரிதான். அப்போது நான் உடன் இருந்தேனா என்றால் ஆமாம். தாவா சொத்தினை பார்வையிட சர்வேயர், நீதிமன்ற ஆணையர் அளக்க வரும்போது நான் கிரையம் பெற்ற சொத்திற்கு தென்பக்கம் உள்ள கிழமேல் பாதை வழியாக வந்தார்கள் என்றால் மேல்பக்கமுள்ள ரோட்டிலிருந்து கிழமேல் பாதை கொஞ்சம் பாதை வழியாக வந்து, அதன்பிறகு தென்வடல் பாதை வழியாக வந்து ஒரு ஆள் செல்லக்கூடிய இடுக்கு உள்ளது அதற்கு வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் தான் தாவா சொத்தினை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் 09.06.2025 மற்றும் 22.10.2025 அன்று தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை, ஆணையர் வரைபடம், சர்வேயர் வரைபடங்கள் என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுவிட்டது. தாவா சொத்தினை பார்வையிட்டு நீதிமன்ற ஆணையர் 09.06.2025 மற்றும் 22.10.2025 அன்று தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை, ஆணையர் வரைபடம், சர்வேயர் வரைபடங்கள் இன்று இந்நீதிமன்றத்தால் நீ.மசா.ஆ.1 முதல் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் எனக்குப் பாத்தியப்பட்ட 1வது தபசில் சொத்தில் தற்போது தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரிதான். நான் வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை எப்படி கொண்டு வந்தேன் என்றால் வேறு மாற்றுப்பாதை வழியாக கொண்டுவந்தேன் மாற்றுப்பாதை எனது இடத்திற்கு தென்புறமுள்ள வேறு ஒருவர் இடத்திலிருந்து கொண்டுவந்தேன். நான் சொல்லக்கூடிய வேறு மாற்றுப்பாதை வழியாக வாகனம் செல்ல வழி உண்டு என்றால் தற்போது உண்டு அவர் சுவர் கட்டிவிட்டால் அந்த வழியாக வரமுடியாது.

இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு வழக்குச் சொத்தைப் பொறுத்து வேறு ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளேனா என்றால் எனது அண்ணாச்சி பசங்களுக்கு அவர்கள் பெயரில் பத்திரம் போட்டுக்கொடுத்தேன். எனது அண்ணாச்சி பசங்களுக்கு அவர்கள் பெயரில் பத்திரம் போட்டுக்கொடுத்த ஆவணத்தில் பாதையை காண்பித்துள்ளேனா என்றால் ஆமாம் தென்வடல் பாதையைக் காட்டியுள்ளேன். எனது அண்ணாச்சி பசங்களுக்கு அவர்கள் பெயரில் பத்திரம் போட்டுக்கொடுத்த ஆவணத்தில் பாதையை காண்பிக்கவில்லை என்றால் அந்த பாதையில் எனக்கு உரிமை கிடையாது என அர்த்தம் என்றால் சரியல்ல பாதையில் உரிமை இருப்பதால் தான் தென்வடல் பாதையைக் காட்டியுள்ளேன். எனது அண்ணாச்சி பசங்களுக்கு அவர்கள் பெயரில் பத்திரம் போட்டுக்கொடுத்த ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது அண்ணாச்சி பசங்களுக்கு அவர்கள் பெயரில் பத்திரம் போட்டுக்கொடுத்த ஆவணத்தில் பாதை காட்டப்படவில்லை அதனால் தான் ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல பாதையில் உரிமை உள்ளது. நீதிமன்ற ஆணையர், சர்வேயர் தாவா சொத்தை அளந்து சர்வேயர் எனது சொத்துக்கு தென்புறம் மண்பாதை இருப்பதாக காட்டியுள்ளார் என்றால் பாதை கிடையாது கம்பி வேலி போட்டு அடைத்துவிட்டார்கள். வண்டிப்பாதை என இருந்தால் அரசு ஆவணங்களில் துலங்கும் என்றால் சந்திரசூரியன் தென்வடல் பாதை 2 பேருக்கும் எழுதிக்கொடுத்துள்ளார் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் நான் பாதை என சொல்லக்கூடிய பகுதியை அரசு ஆவணங்களில் துலங்கவில்லை என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான் அரசு ஆவணங்களில் துலங்கவில்லை. எனக்கு தென்பக்கம் பாதை உள்ளது என்றால் சரியல்ல பாதை கிடையாது. உள்ளாட்சி தேர்தலில் ஏற்பட்ட விரோதத்தால் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனக்கு 2 வது தபசில் சொத்தில் உரிமை இருந்திருந்தால் என் அப்பா காலத்திலேயே வழக்குப் போட்டிருப்பார் 2000 ம் ஆண்டு வரை என் அப்பா உயிருடன் இருந்தார் அதுவரை அவர் வழக்குப் போடவில்லை நான் 2021ல் வேண்டுமென்றே வழக்குப் போட்டுள்ளேன் என்றால் என் அப்பா உயிருடன் இருக்கும்வரை பிரதிவாதிகள் வீடு கட்டவில்லை பாதை சும்மா தான் இருந்தது அதன்பிறகு வீடு கட்டிவிட்டார்கள் அதனால் வழக்குப் போட்டேன். எனக்கு 2 வது தபசில் சொத்தில் உரிமை இருந்திருந்தால் என் அப்பா கிரையம் பெற்ற வா.சா.ஆ.4 பாதை காண்பித்திருப்பார்கள், உரிமை இல்லாததால் தான் பாதை காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. எனது ஆவணங்களுக்கு விரோதமாக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.01.23 18:25:27 +0530